திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, அன்றைய நிலைமை அது. இன்றைக்கு மினிமம் போர்ஸை உபயோகப்படுத்தி இருந்தால்கூட இதைத் தடுத்திருக்க முடியும். என்றாலும்கூட, மக்கள் இந்தக் கோரிக்கைகள் எப்படி நியாயமற்றவை என்பதைப் புரிந்து கொள்வதற்காக போராட்டத்தை அனுமதித்து, உரிய நேரத்தில் உரிய நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து, இன்றைக்கு மதுரை சிறைச்சாலையிலே சுமுகம் நிலவுகிறது, அமைதி நிலவுகிறது. எனவே அங்கே சுமுகம் நிலவுகிற காரணத்தாலே அந்தப் பிரச்சினைக்காக இந்தச் சபையை ஒத்தி வைக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையினை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்குப் பின்னர், பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்று கருதி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

மத்திய கலால் வரிக் கொள்கையினால் திருப்பூர் பனியன் ஆலை உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத்திய கலால் வரி, சென்ட்ரல் எக்சைஸ் கொள்கையினால் திருப்பூர் பனியன் உற்பத்தியாளர்கள், தாங்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதால், பனியன் தொழில் பாதிக்கப்பட்டுள்ள நிலைமை குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கோரி இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடம் ஒரு அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். திரு கே.எஸ். துரை முருகன், திரு. வெ. பழனிசாமி, திரு. இரா. தாமரைக்கனி. சம்பந்தப்பட்ட தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்றவகையில் திரு. வெ. பழனிசாமி அவர்கள் இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் கிட்டத்தட்ட 2,000 ஆலைகள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டு, வேலைநிறுத்தத்தை அறிவிக்கிற சூழ்நிலையில் அவை முடங்கி, தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலைமை மத்திய அரசின் பலமுனை வரி விதிப்பால் ஏற்பட்டு, கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12-05

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயம் தோய்த்தல்—டையிங்; வெளுத்தல்—பிளீச்சிங்; திரைச் சித்திரம் அச்சிடல்—ஸ்கிரீன் பிரிண்டிங்; நெகிழும் தன்மையுள்ள எலாஸ்டிக் நாடா போன்றவற்றுக்கு தற்போது மத்திய அரசு வரவு செலவுத் திட்டத்தில் 10 முதல் 15 சதவிகிதம் விதித்துள்ள எக்சைஸ் தீர்வையை நீக்கக் கோரி பனியன் தொழில் மற்றும் அதனைச் சார்ந்த உப தொழில்களைச் செய்பவர்கள் 20-3-1995 முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழகத்திலே இருக்கிற திருப்பூரிலேதான் பனியன் துணிகள் அதிகமாகத் தயாரிக்கப்படுகின்றன, அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்கு அடுத்து லூதியானாவிலேதான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. திருப்பூரிலே மட்டும் 2,300 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்து, மத்திய அரசுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழகத்தினுடைய முக்கியப் பங்காக 2,300 கோடி ரூபாய்க்கு அன்னியச் செலாவணி மத்திய அரசுக்கு இன்றைக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதன் மூலமாக 2 இலட்சம் பேர்களுக்கு நிலைத்த வேலை வாய்ப்பும், 5 இலட்சம் பேர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய வேலை வாய்ப்பும் அளிக்கக்கூடியதாக இந்தத் தொழில் இருந்து வருகின்றது. ஆகவே இந்தத் தொழிலிலே பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் இன்றைக்குக் காலவரையறையற்ற போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நெசவாளர்கள் மீது அதிக அக்கறை கொண்டிருக்கின்ற காரணத்தினால், மத்திய ஜவுளித்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, சிட்டா நூலினுடைய மானியத்தை உயர்த்தச் சொன்னதைப்போல, இன்றையதினம் பனியன் தொழில் நசிந்து விடக்கூடாது என்பதிலும், அந்தத் தொழில் நடத்தக்கூடியவர்கள் நசிந்துவிடக்கூடாது என்பதிலும், மிகுந்த அக்கறையோடு ஜவுளித்துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் உடனடியாகத் தெரிவித்துக் கடிதம் எழுதச் சொல்லி, துறைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை நம்முடைய துறை இன்றைக்கு எழுத இருக்கிறது. இதைத் தவிர மேல் நடவடிக்கைகளை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவுப்படி, இந்தத் துறை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடையக்கூடிய வகையில் வரியே இல்லாத பட்ஜெட்டை உருவாக்கிய நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மத்திய அரசு விதித்திருக்கின்ற இந்த

வரியை நீக்கக்கோரி இன்றைக்குப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிற பனியன் தொழிற்சாலைகளுடைய அந்த ஊழியர்களுக்கு, நிச்சயமாக நல்ல நடவடிக்கையை எடுப்பதற்கு அனைத்திலும் உறுதியாக துணை நிற்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. கவன ஈர்ப்பு

தர்மபுரி, ஒசூர், பாலக்கோடு வழக்கறிஞர்கள் காலவரையறையின்றி நீதிமன்றங்களைப் புறக்கணிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் பெ. பொன்னுசாமி, கே.ஏ. மனோகரன், மு. வெங்கடராம ரெட்டி ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு சட்டத் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. கே.ஏ. மனோகரன்.

திரு. கே.ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, ஒசூர், பாலக்கோடு வழக்கறிஞர்கள், காலவரையின்றி, நீதிமன்றங்களைப் புறக்கணிப்பது குறித்து", மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து, ஒரு விளக்க அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை

சென்னை உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையின்படி, மாநிலத்தில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத இடங்களில் உள்ள 43 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களை உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களாக மூன்றாண்டு கால கட்டத்தில் முறையே, 1994-95-ம் ஆண்டில் 15 நீதி மன்றங்களும், 1995-96-ம் ஆண்டில் 14 நீதிமன்றங்களும், 1996-97-ம் ஆண்டில் 14 நீதிமன்றங்களும் மாற்றி அமைக்க அரசு தமது ஆணை எண் 1426, உள்துறை, நாள்: 23-11-1994-ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது. இவற்றில் 1994-95-ம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்ட 15 நீதிமன்றங்களில்